## அமைச்சர் பி.மூர்த்தி ஏற்பாட்டில்

# மதுரை கிழக்குத் தொகுதியில் பிரமாண்ட சிறப்பு ஜல்லிக்கட்டு விழா!

## கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கில் நடைபெற்றது!









கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. மதுரை கிழக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மதுரை கிழக்கு, மதுரை கிழக்கு வடக்கு, மதுரை கிழக்கு தெற்கு மற்றும் வண்டியூர் பகுதியைச் சேர்ந்த ஜல்லிக்கட்டு காளைகள், மாடுபிடி வீரர்கள் பங்கேற்கும் வகையில் மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஏற்பாட்டில் பிரம்மாண்டமான சிறப்பு ஜல்லிக்கட்டு போட்டிகள் அலங்காநல்லூர் கீழக்கரையில் அமைந்துள்ள கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கில் நடைபெற்றது. இவ்விழாவில் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், மேலூர் வருவாய் கோட்டாட்சியர் சங்கீதா உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழகத்தினர், அரசு அதிகாரிகள், பல்லாயிரக்கணக்கான பார்வையாளர்கள், மாடுபிடி வீரர்கள், காளை உரிமையாளர்கள் என ஏராளமானோர் பங்கேற்றனர்.

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி,

## பேரூர் கழக செயலாளர்கள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் மேயர் ரெ.மகேஷ் ஆலோசனை வழங்கினார்!

கன்னியாகுமரி, ஜன. 28 -

கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டமானது 25.01.2026, ஞாயிறு அன்று மாலை 6.00 மணிக்கு கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட அவைத்தலைவர் எப்.எம்.இராஜரெத்தினம் தலைமையில் நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட தலைமை கழக அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. கூட்டத்தில் நாகர்கோவில் மாநகரச் செய லாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி ஆலோசனைகள் வழங்கினார்கள்.

கூட்டத்தில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட பொருளாளர் ஐ.கேட்சன், துணை செயலாளர் கரோலின் ஆலிவர்தாஸ், ஒன்றிய கழக செயலாளர்கள் எம்.மதியழகன், பா.பாபு, த.செல்வன், மோ.பிராங்கிளின், ஏ.சுரேந்திரகுமார், பி.எஸ்.பி.சந்திரா, ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் ச.சுந்தர்சிங், ஜெ.மிலன், நகர கழக செயலாளர்கள் நாகூர்கான், குமரி ஸ்டீபன், பகுதி கழக செயலாளர்கள் இ.ஜவகர், த.ஜீவா, மு.சேக்மீரான், என்.பி.துரை உட்பட பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழே குறிப்பிட்ட தீர்மானங்கள் நிறைவே ற்றப்பட்டது.

இந்திய தேர்தல் ஆணையத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தத்தில் தங்களை முழுமையாக பயன்படுத்தி வீடு வீடாக சென்று களப்பணியாற்றி ஒத்துழைத்த மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை கழக செயலாளர்கள் மற்றும் வாக்குச்சாவடி முகவர்கள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், வழக்கறிஞர்கள், கழக முன்னோடிகள் ஆகியோருக்கு இக்கூட்டம் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

கழக தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட 3 சட்டமன்ற தொகுதிகளில் ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் 10 பேர் கொண்ட மகளிரை தேர்ந்து எடுத்து பிப்ரவரி 1ம் தேதி முதல் மார்ச் 8ம் தேதி வரை அந்தந்த வாக்குச்சாவடிக்குட்பட்ட வீடுகளில் வீடு வீடாக சென்று கழக அரசின் மகளிர் நலத் திட்டங்களை எடுத்துக் கூறியும், சாதனை திட்டங்களை துண்டு பிரசுரமாக வழங்கியும் மகளிரிடம் கழகத்திற்கான ஆதரவினை திரட்டிட வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

பிப்ரவரி 1 முதல் பிப்ரவரி 20ம் தேதி வரை தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலுக்கான "தமிழ்நாடு தலைகுனியாது" பரப்புரையை மேற்கொள்ளும் வகையில் தலைமைக் கழகம் அனுப்பி வைக்கும் நட்சத்திர பேச்சாளர்களை வைத்து ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியிலும் 4 இடங்களில் பொதுக்கூட்டம் அல்லது தெருமுனைக் கூட்டம் மண்டல பொறுப்பாளர்களுடன் இணைந்து முக்கிய பிரமுகர்கள், மாணவர்கள், இளைஞர்கள், உள்ளிட்டோரை சந்தித்து கலந்துரையாடலாக பரப்புரையை மேற்கொள்ள வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெறும் தென்மண்டல இளைஞர் அணி சந்திப்பு பிப்ரவரி 7ம் தேதி விருதுநகரில் நடைபெற உள்ளதால் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து இளைஞர் அணி நிர்வாகிகளும் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

தீர்மானம்: 5

கழக வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2), வாக்குச்சாவடி குழு உறுப்பினர்கள் (BLC) மற்றும் வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்கள் (BDA) ஆகியோரை தேர்தல் பணிக்கு முழுமையாக தயார் செய்யும் வகையில் "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" - வாக்குச்சாவடி குழுவினருக்கான பயிற்சி மாநாடு பிப்ரவரி 21ம் தேதி அன்று (தெற்கு மண்டல மாநாடு) மதுரையில் நடைபெற உள்ளதால் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட நாகர்கோவில், கன்னியாகுமரி, குளச்சல் ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் உள்ள BLA2, BLC, BDA ஆகிய அனைவரும் கண்டிப்பாக தவறாது கலந்து கொள்ள வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் கழகத்தின் வெற்றியை பறைசாற்றும் வகையில் மார்ச் 8ம் தேதி அன்று திருச்சியில் நடைபெறும் "ஸ்டாலின் தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும்"மாபெரும் கழக மாநில மாநாட்டில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்தில் இருந்து பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொள்வது எனவும், கழகத் தலைவர் சுட்டி க் காட்டுகின்ற வேட்பாளர்களை அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய இன்றே அயராது களப்பணியாற்றிடுவது எனவும் இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் எப்.எம்.இராஜரெத்தினம் தலைமையில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த் முன்னிலையில் மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் சிறப்புரையாற்றி ஆலோசனை வழங்கினார். கூட்டத்தில் ஐ.கேட்சன், கரோலின் ஆலிவர்தாஸ், எம்.மதியழகன், பா.பாபு, த.செல்வன், மோ.பிராங்கிளின், ஏ.சுரேந்திரகுமார், பி.எஸ்.பி.சந்திரா, ச.சுந்தர்சிங், ஜெ.மிலன், நாகூர்கான், குமரி ஸ்டீபன், இ.ஜவகர், த.ஜீவா, மு.சேக்மீரான், என்.பி.துரை உட்பட பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் 6 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.



தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் வட்டம், கே.தங்கம்மாள்புரம் கிராமத்தில் நேதாஜி கிரிக்கெட் கிளப் நடத்தும் 20ம் ஆண்டு மாபெரும் கிரிக்கெட் போட்டியினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி.மார்க்கண்டேயன் துவக்கி வைத்தார். நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் இம்மானுவேல், சின்னமாரிமுத்து உட்பட கழக நிர்வாகிகள், விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டனர்.